கொழும்பு தமிழ்ச் சங்கம் நூலகம்

# போது



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
23 Feb 2005
நூலகம்

## ரேஜினோல்ட் குமார்
(ஜெஸ்கொம் பதிப்பக ஊழியர்)

"சுனாமி தந்த சோகம்
சொற்களில் அடங்குமோ?
அநாமியான நீ
அமரனானாய், வாழ்க"



எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

— மகாகவி பாரதியார் —

விலை 10/=

ஆண்டுச் சந்தா 100/=

வெளியீடு :
PROFESSIONAL PSYCHOLOGICAL COUNSELLING CENTRE
BATTICALOA.

# உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்....

போது

போது -7 இதழ்-41

தை - மாசி 2005
தோற்றம் 5-5-1998

நிர்வாக ஆசிரியர்
(Managing Editor)
சுவாமிஜி
போல் சற்குணநாயகம்.யே.ச.

ஆசிரியர்
(Editor)
வாகரைவாணன்

நிர்வாகம்:
(Management)
சி.எம்.ஒக்கஸ்

பணிமனை:
ஜெஸ்கொம்அச்சகம்,
இல. 1, யேசுசபை வீதி,
மட்டக்களப்பு.

தொலைபேசி:
065-2223822, 065-2222983

E-mail
ppcc@diamond.lanka.net

இலங்கைத் தீவின் வரலாற்றில் என்றுமே இல்லாத அளவிற்கு மிக மோசமான இன்னலை - இழப்பை கடந்த ஆண்டு கடைசிப் பகுதியில் (26.12.2004) நாம் சந்திக்க நேர்ந்தமைக்குக் காலம் அன்றி வேறு எதுதான் காரணமாக இருக்கமுடியும்?

இருபது ஆண்டுகளாக இனவாதத் தீயில் எரிந்துகொண்டிருந்த இந்த நாட்டின்மீது இயற்கை தொடுத்த மிகப்பெரிய போர் - சொல்லமுடியாத சோகத்தைத்தான் எமக்குச் சொத்தாக்கித் தந்திருக்கின்றது. இந்த நிகழ்வு இலங்கைக்கு ஓர் புதிய அனுபவம் மட்டுமன்றி கசப்புமிக்க காடியுமாகும்.

விஞ்ஞானத்தின் உச்சியில் வீற்றிருக்கின்றோம் என்று வீராப்புப் பேசுகின்ற நாம் - இன்று இயற்கையிடம் தோற்றுவிட்டோம் என்பது பகிரங்கமான உண்மை. இது நாட்டின் வளர்ச்சியின் குறுக்கே போடப்பட்ட பாரிய தடைக்கல் என்பதில் சந்தேகமில்லை.

முன்னேறத் துடிப்பவன் வாழ்க்கையில் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்படுவதை நாம் நாள்தோறும் காண்கின்றோம். பொறாமை, போட்டி, பொச்சாப்பு போன்ற இழிந்த மன உணர்வுக்கு ஆட்பட்ட மனிதப்பதர்கள் தனது உழைப்பால் தலையெடுக்க

முனைபவனைத் தட்டி விழ்த்திட தருணம் பார்த்தல் இன்று ஒரு சாதாரண சங்கதியே. ஆனாலும் 'தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டெ'ன்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போன்று திட்டமிட்டு சரியான பாதையில் முன்னேறுபவனை எந்தவித சதியும் சூழ்ச்சியும் தீண்டிடமுடியாது. ஏனென்றால் அவன் தீ!

சாதாரண மனிதனின் சதி சூழ்ச்சியை ஓரளவு ஒத்ததுதான் சர்வ வல்லமை படைத்த இயற்கையின் இந்த ஊழித் தாண்டவம். இத்தாண்டவம் ஏராளமான மனித உயிர்களை உடைமைகளை அழித்துவிட்டபோதும் அதனால் தமது தன்னம்பிக்கையைத் தகர்த்துவிடமுடியவில்லை.

இயற்கையின் இந்தச் செயல் நமக்கு விடுவிக்கப்பட்ட மிகப் பெரிய சவால். சவால்களை நாம் சந்தித்தே ஆகவேண்டும். ஏனென்றால் சவால்கள்தான் சரித்திரங்களைப் படைக்கின்றன.

ஆசிரியர் பக்கம்

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் இது இருள் சூழ்ந்த காலம். சமாதானமோ சண்டையோ இல்லாத ஒரு புதிய உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் நம்மீது இயற்கை ஒரு பயங்கர இடியாகவே இறங்கியிருக்கின்றது. இதனை நாம் தாங்கியே ஆக வேண்டும். உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் - அச்சமில்லை அச்சமில்லை என்ற பாரதியின் மன உறுதி நமக்கு இருக்குமானால் - இந்த இடி துச்சம்தான்.

நம்பிக்கைதான் வாழ்க்கை. இந்த நம்பிக்கையை எந்தச் சக்தியாலும் நலிவடையச் செய்யமுடியாது என்பதை நாம் உலகிற்கு காட்டவேண்டிய நல்ல தருணம் இது.

இத்தருணத்தைத் தக்கவிதத்தில் பயன்படுத்தி மீண்டும் தலைநிமிர்ந்து நிற்போம். ! புதியதோர் தேசத்தைப் பூமியில் உருவாக்குவோம்.!

வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற (குறள்)

அன்புடன்
வாகரைவாணன்.



# சிறுவர் சிந்தனைப் பாட்டு - 5

## சுனாமி

நிலமது அதிரும்போது
நெடுங்கடல் பரப்பின்மீது
பல பல அலைகள் தோன்றி
பாய்ந்ததி தூரம் செல்லும் !

கரைதனை அணுகும் வேளை
காண்பவர் அஞ்சும் வண்ணம்
தரை தனை அழித்துக் கொண்டு
தாவிடும் ஊருக்குள்ளே !

வானினை மூடும் வண்ணம்
வன்னலை எழும்பி மேலே
நான் எனும் கர்வத்தோடு
நடத்திடும் ஊழிக்கூத்து !

சுனாமி என்றிதனை இன்று
சொல்லுவர் மக்கள் எல்லாம்
அநாதியில் கடல்கோள் என்று
அழைத்தனர் தமிழர் அன்று !

ஈழத்தின் கரையைச் சுற்றி
இருந்த நம் கிராமம் எல்லாம்
சூழ்ந்த இவ்வலைகளாலே
சுடுகாடாய்ப் போகும் தம்பி !

உன்னைப்போல தம்பிமாரே
ஊரெல்லாம் இறந்து போனார்
பெண்களும் அதிகமாகப்
பெருங்கடல் வசமேயானார்

ஆயிரக்கணக்கில் மக்கள்
அநியாயமாகச் செத்தார்
காய் பழம் பிஞ்சு எல்லாம்
கடலினில் மிதக்கும் அம்மா !

மார்கழி இருபத்தாறில்
மாகடல் பாய்ந்ததாலே
சீர் மிகு எங்கள்நாடு
சீவனே அற்றுப்போகும்

கருணையே இல்லா இந்தக்
கடலினைத் தெய்வம் என்று
கருதிய மக்கள் எல்லாம்
கையினிக் குவிப்பாராமோ?

**அறிவாளன்**



# வாழ்க்கை வாழ்வதற்கே

வாழ்க்கையின் குறிக்கோள் என்ன?
ஒவ்வொருவரின் மனதிலும் அவ்வப்போது எழக்கூடிய நியாயமான கேள்வி இது.

ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக ஒரு சிலர் இக்கேள்வியைக் கேட்பார்கள். வேறு சிலருக்கு நியாயமாகவே இச்சந்தேகம் உண்டு. நாம் எதற்காக இந்தப் பிறவி எடுத்தோம்? எம் வாழ்க்கையின் குறிக்கோள்தான் என்ன என்ற கேள்வி கிடைத்துக்கொண்டே இருக்கும்.

இந்தக் கேள்விக்கு ஒரேமாதிரியான பதில் கிடைப்பதில்லை. கடவுளைப் பார்ப்பதும் கடவுளை அடைவதும் தான் இலட்சியம்.. என்று சிலர் கூறுவார்கள்.

நமது பாவங்களுக்கு வருந்திவிட்டு சொர்க்கத்துக்குப்போவதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று சொல்லும் மத சாஸ்திர விற்பனர்களும் உண்டு.

இறப்பது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கமுடியாது. அதுதான் குறிக்கோள் என்றால் நாம் பிறந்திருக்கவே வேண்டாம். சொர்க்கம்தான் இலக்கு என்றால் நாம் எதற்காக இங்குபிறந்திருக்க வேண்டும்.?

எனவே குறிக்கோள் இந்தப்பிறப்பில்தான் இருக்க வேண்டும். என்ன அது?

கல்யாணம் செய்து கொள்வதுதான் வாழ்க்கையின் குறிக்கோள் என்று சொல்லலாமா? சொல்லலாம்தான். ஆனால் திருமணமான எல்லோருக்கும் குறிக்கோள் நிறைவேறுவதில்லை. மணவாழ்க்கை என்பது

மிகச் சிறப்பாக அமைவதுண்டு. அதே சமயம் திருமணத்தால் பிரச்சனைகள் ஏற்படும் வாய்ப்பும் உண்டு.

திருமணம் என்பது வார்த்தையா? வாக்கியமா? (Word or Sentence) என்று என்னிடம் ஒருவர் கேட்டார்.

அது அர்த்தமுள்ள வார்த்தையாக இருக்கலாம். அல்லது வாழ்க்கையில் உங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாகவும் (Sentence) இருக்கலாம். உங்கள் திருமண வாழ்க்கையை எப்படி அமைத்துக்கொள்கிறீர்கள் என்பதை பொறுத்துத்தான் அது ...' என்றேன்.

அப்படியானால் வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள்தான் என்ன?

ரொம்ப சிம்பிள்.. வாழ்வதுதான் குறிக்கோள். அதாவது வாழ்க்கை வாழ்வதற்கே !

அடுத்து எழும் கேள்வி வாழ்வது என்றால் என்ன? சுவாசிப்பது மட்டும் வாழ்க்கையா?

மனித இனம் உட்பட யாருமே எதுவுமே பிறந்தவுடனேயே வாழ்க்கைக்குத் தயாராகிவிடுவதில்லை. உதாரணத்திற்கு ஒரு கன்றுக்குட்டி பிறந்த மறுகணமே அது பசுவாக மாறுவதில்லை.

கன்றுக்குட்டி ஒரு குழந்தையாகவே பிறக்கின்றது. அது வளர்ந்து ஆளாகி பசுவாக வேண்டும் என்பது இயற்கையின் நியதி.

ஆனால் வளர வேண்டும் என்பதற்காக கன்றுக்குட்டி பிரத்தியேகமாக எதுவும் செய்யவேண்டியதில்லை. சும்மா உயிருடன் இருந்தாலே போதுமானது. வேண்டிய அளவிற்கு பாலும் மற்றைய உணவும் கிடைத்து விபத்து எதிலும் மாட்டாமல் சிலவருடங்கள் உயிர்வாழ்ந்தாலே போதும். கன்று தானாகவே வளர்ந்து பசுவாகிவிடும்.



நமக்கெல்லாம் ஏற்படுவதுபோல் பசுக்களுக்கு எப்பிரச்சனையும் ஏற்படுவதில்லை. நான் விகாரமான பசு யாருக்கும் என்னால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்ற காம்ளெக்ஸ் பசுக்களுக்கு இல்லை. நான் கறுப்பாகப் பிறந்துவிட்டேன். அந்தப் பசு மட்டும் சிவப்பாக இருக்கின்றதே என்ற பாகுபாடும் பொறாமையும் அதற்கு இல்லை. கண்ணாடிமுன் நின்று சே! நான் பார்க்க சகிக்கவில்லை என்று எந்தப் பசுவும் புலம்புவதில்லை. அதனாலேயே பசுக்கள் மத்தியில் பியூட்டிபாலரோ, பிளாஸ்டிக் சர்ஜரிகளோ இல்லை.

ஒரு கிராமத்தில் ஒரே ரகமான பசுக்கள் இரண்டும் ஒரே அளவான பால்தான் கொடுத்தன. அப்படியானால் இரண்டிற்கும் ஒரே விலைதானே நிர்ணயிக்க வேண்டும். ஆனால் கொம்புகள் சீராக உள்ள பசுவுக்கு ஒரு விலை.. கொம்பு வளைந்துள்ள பசுவிற்கு கம்மி விலை. இதற்குக் காரணம் பசுவிடம் இல்லை. அதைவாங்குபவரிடம் இருக்கும் காம்ப்ளெக்ஸ். ஒழுங்கான அழகான கொம்புகள் கொண்ட பசுவுக்கு முதலாளியாக இருந்தால் ஊரில் நான்குபேர் தன்னைப் பாராட்டுவார்கள் என்ற நினைப்பு அவருக்கு. பசு அழகாக இருந்தால் தனக்குப் பெருமை என்ற எண்ணம் அவருக்கு. இதற்காக கூடுதல் விலை கொடுக்கவும் அவர் தயார். இது ரொம்பவும் காஸ்ட்லியான காம்ப்ளெக்ஸ்.

பொதுவாகவே மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற காம்ளெக்ஸ் நமக்கு அதிகம். இது துரதிஸ்ட வசமானது. நாலுபேர் என்ன நினைப்பார்களோ ? என்ற பீதியில் தங்கள் இமேஜைக் காப்பாற்ற நினைப்பவர்கள் நிறையப்பேர் உள்ளனர். பலர் கல்யாணம் செய்வதே மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்துதான். எதற்கும் லாயக்கற்றவன் என்ற முத்திரை விழுந்துவிடுமோ என்கிற பயம்.

இப்படி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற பயம் மனித இனத்திற்குத்தான். பசுக்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மனிதனும் குழந்தையாகவே பிறக்கின்றான். குழந்தையின் உடல் கொஞ்சம் கொஞ்சமாக வளரவேண்டிய பொறுப்பை இயற்கை கவனிக்கின்றது. ஒரு சிலவருடங்கள் வாழ்ந்து உடல் அளவில் வளர்ந்துவிட்டாலே அவன் இளைஞன் ஆகிவிடுகின்றான். ஷேவ் செய்யவேண்டிய அவசியம்

ஏற்படுகின்றது. மற்றப்படி அவன் தாடி வளர எவ்வித முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. தன்னால் அது வளர்ந்துவிடும். அதே சமயம் அவன் பட்டதாரியாக வேண்டும் எனில் பள்ளிக்குச் செல்ல வேண்டும், படிக்க வேண்டும். அறிவை வளர்க்க வேண்டும். பள்ளிப்படிப்பு முடிந்ததும் கல்லூரிக்குள் நுழைய வேண்டும். அதற்கு நிறைய உழைக்க வேண்டும்.

ஆனால் எவ்வித முயற்சியும் எடுக்காமல் சும்மா சாப்பிட்டுக்கொண்டு ஊரைச் சுற்றிக்கொண்டு இந்தாலே போதும். ஒருவன் Adult ஆகிவிடுகிறான். கல்யாணம் செய்யவும் தயாராகிறான்.

வாழ்க்கை அத்தனை எளிமையானதா? உண்மையான வாழ்க்கை இதுதானா? இல்லை உடல் வளர்ச்சியை பக்குவப்பட்ட வளர்ச்சி எனச் சொல்ல முடியாது. வளர்ந்தபின் மனதளவில் பக்குவப்பட வேண்டியது வாழ்க்கையில் மிக முக்கியம் ; அவசியம் கூட.

மனம் மலர வேண்டும். அது பூத்துக் குலுங்க வேண்டும். சுகந்த மணம் கமழ வேண்டும்.

(சுவாமி தயானந்த சரஸ்வதியின் -
'மனம் மலரட்டும்' நூலிலிருந்து.)

**இந்தோனிசியாவிலிருந்து 500 கி.மீ வேகத்துடனும் 180 கி.மீ அகலத்துடனும் இலங்கையை வந்தடைந்த சுனாமி (26/12/2004) இங்கு பேரழிவை உண்டாக்கியது.**





# சுனாமியே......சொல்

சுனாமியே........ சொல்
நீ செய்தது சரிதானா?

அநாமியாக எங்களை ஆக்கி விட்ட அலைகடலே
நீதானா அந்தக்
கொடிய அரக்கன்?

எத்தனையோ உயிர்கள்
உன்னிடம் இருக்கும் போது
அத்தனையையும் விட்டுவிட்டு
எங்களைத்தானா நீ
அடித்துச் சாப்பிட வேண்டும்?
அப்படி என்ன
அசுரப் பசி உனக்கு?

முன்பு
குமரிக் கண்டத்தைக்
குழி தோண்டிப் புதைத்தாய்
தென் மதுரையைத்
தின்றாய்
கபாடபுரத்தையும்
காணாமல் செய்தாய்
சிந்து வெளியையும்
உண்டு சீரணித்தாய்
காவிரிப் பூம் பட்டினத்தின்
கதையையும் மாற்றினாய்

இப்போது....
ஈழத்தின்
இரண்டு கரைகளையும்
இரையாக எடுத்துவிட்டாயே
இது என்ன நியாயம்?

சுமத்திராவில் இருந்து
புறப்பட்ட
சமுத்திராதேவியே
இது என்ன சதி

அடி தாங்கித் தாங்கி
அழுது புலம்பும்
எங்கள் மீது
இடியாக இறங்கலாமா நீ?
இது தான் உன் தர்மமா?

எதிர் பாராமல்
எங்கள் மீது நீ
எப்படிப் போர் தொடுக்கலாம்?
இதுதான் வீரமோ?

இருபதாண்டு காலம்
அகதிகளாக
இருக்கும் நாங்கள்
இனி எங்கே போவது?

பச்சிளம் பாலகர் கூடவா
உன் பசிக்கு
இரையாக வேண்டும்
அடப் பாவி......



கட்டிய ஆடைகளைக்
கழற்றி எறிந்து விட்டு
எங்கள்
கன்னிப் பெண்களைக் கூட
கம்பிகளுக்குள்ளும்
கட்டைகளுக்குள்ளும்
தள்ளி விட்டாயே
நீ தானா அந்த
கடலாட்சி அம்மன்?
உன்னையா நாங்கள் கையெடுத்துக் கும்பிட்டோம்?

கோயிலுக்குக்
கும்பிடச் சென்றவர்களையும்
வாயில் அள்ளிப்
போட்டுக் கொண்டாயே
உனக்கு
வாரி என்று பெயர்
வைத்தது சரிதான்

கடலே.... நீ எங்களுக்குக்
காவல் என்றல்லவா
நினைத்தோம்.... ஆனால்
காலன் ஆகி விட்டாயே
என்ன காரணம்?

நம்பிய உயிர்களை
இப்படியா
நரபட்சணம் செய்வது?

ஊழித் தாண்டவத்திற்கு
நீ தானா
தக்க உதாரணம்?

கடலே.......
நெய்தல் நிலங்களில்
நீ எழுப்பிய
கல்லறைகள் தான்
எங்கள்
நினைவாலயங்கள்
நீ இருக்கும் வரை
இந்த
ஆலயங்களும் நிலைக்கும்

சுனாமி....
இன்னுமொரு முறை
எங்களைச்
சுற்றி வளைத்து விடாதே!
சொல்லி விட்டோம்!

வாகரைவாணன்





# மக்கள் தலைவன் மாசேதுங்

பரந்துவிரிந்த சீனாவில் கம்யூனிஸ்ட்டுக்களின் தலைவர் மாசேதுங்கின் சர்வாதிகார ஆட்சி 1949ம் ஆண்டு ஜனவரி 21ம் திகதி மலர்ந்தது. அப்போது என்றில்லை; இப்போதுகூட மாசேதுங் பெயரை உச்சரித்தாலே போதும் சீனாவின் மக்கள் மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதுபோல மண்டியிடுவார்கள்.

மாசேதுங் என்ற பெயரில் அப்படி என்ன இருக்கிறது? இரண்டாம் உலகப்போர் ஓய்ந்த சமயம் ... ஜப்பானோடு போரிட்டுப் போரிட்டு அப்போது தளர்ந்து போயிருந்தது சீனாவை ஆண்ட ஷியாங் கே ஷியின் ராணுவம்.

நீண்ட வருடங்களாக இவரின் ஆட்சிக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருந்த மாசேதுங்கின் சிவப்பு இராணுவம் இதுதான் சமயம் என்று உள்நாட்டுப் புரட்சியில் குதிக்க ... சீனாவின் இராணுவம் புறமுதுகு காட்டி ஓடியது. ஷியாங் கே ஷிக்கும் தாய்வான் தீவுக்கு தப்பி ஓடினார்.

உலகிலேயே மிகப்பெரிய இராணுவங்களில் ஒன்றான சீன இராணுவத்தை ... அதுவும் அமெரிக்காவின் ஆதரவு பெற்றிருந்த அந்த இராணுவத்தை மாசேதுங்கால் எப்படி ஜெயிக்கமுடிந்தது...?

காரணம் மாசேதுங்கின் வாழ்க்கைத் தத்துவம். சின்னவயதிலிருந்தே நீந்துவதென்றால் மாசேதுங்கிற்குக் கொள்ளைப் பிரியம். சீறிப் பாயும் காட்டாறு ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள் நீச்சல் குளம் இது எல்லாம் மாசேதுங்கைப் பொறுத்தவரை ஒன்றுதான்.

சாப்பிட்டுக்கொண்டே பேசுவதுபோல நீந்திக்கொண்டே தனது கட்சிச் சகாக்களிடம்பேசும் வழக்கம் இவருக்கு உண்டு. ஒருமுறை தெற்கு சீனாவில் உள்ள ஆற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் ஆர்ப்பரிப்பைக் கரையோரமாக நின்று வேடிக்கை பார்த்தபடியே கட்சிச் சகாக்களுடன் பேசிக்கொண்டிருந்த மாசேதுங் 'டகால்' என்று ஆற்றுக்குள் தாவினார். பாய்ந்து வந்த வெள்ளம் அவரை அடித்துக்கொண்டுபோனது. கொஞ்ச நேரம்தான் காட்டுவெள்ளத்தை எதிர்த்து எதிர் நீச்சல் போட்டுக் கரையேறினார் அவர்.

ஐயையோ.. உங்களுக்கு என்ன ஆனது என்று பதறிப்போய் ஓடிவந்த நண்பர்களிடம் சொன்னார்; ஓர் ஆபத்து வந்தால் அந்த ஆபத்து பற்றியே நான் நினைப்பதில்லை. அப்படி நினைத்தால் அந்த ஆபத்து என்னை ஜெயித்துவிடும். எந்த நோக்கத்திற்காக ஆற்றில் குதித்தேனோ அதில் மட்டும் குறியாய் இருந்தேன். அதுதான் நீச்சல் அடித்து வெளியே வந்துவிட்டேன்.

மாசேதுங் தன் மக்களைப் பார்த்து 'புரட்சி செய்யப்புறப்படு' என்று கட்டளை இட்டால் நாட்டில் உள்ள நண்டுசிண்டுகள்எல்லாம்கூட கையில் கிடைத்த ஆயுதத்தை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டுவெளியே வருவார்கள். எதற்கும் பயப்படதீர்கள். பயந்தால் மூழ்கிவிடுவீர்கள் என்ற மாசேதுங்கின் முழக்கம் மக்களை அலை அலையாகப் புறப்பட்டு வரவழைக்கும்.

ரஷ்யாவை நிர்மாணிக்க ஸ்டாலினிக்கு அயல்நாடுகள் எதுவுமே உதவி செய்யவில்லை. அதனால் ஸ்டாலின் மாதிரி நானும் என் நாட்டில் உள்ள வளத்தைக் கொண்டே சீனாவை நிர்மாணிக்கப் போகின்றேன் என மாசேதுங் நினைத்தார்.

தனது நாட்டை வலிமைமிக்கநாடாக மாற்றியே தீருவது என்ற வெறியில் தன் நாட்டின்விவசாய விளைநிலங்கள் அத்தனையையும் அவர் அரசுடைமை ஆக்கினார். விவசாயிகளைக் கட்டாயப்படுத்தி கடுமையாக வேலை வாங்கினார்.



தனது நாட்டில்விவசாய உற்பத்தி அதிகமாகினால்தான் பெரிய தொழிற்சாலைகளை நிர்மாணிக்க நமக்கு உபரிவருமானம் கிடைக்கும் என சொல்லி காலநேரம் எல்லாம் பார்க்காமல் மக்களை உழைக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்.

ஆனால் காலம் அவருக்குக் கைகொடுக்கவில்லை. பருவமழை தொடர்ந்து பெய்தது. சாப்பாட்டிற்கே பிறநாடுகளிடம் கையேந்தும் அளவிற்குப் பஞ்சம் ஏற்பட்டது.

கம்யூனிஷ் கட்சிக்குள்ளேயே மாசேதுங்கிற்கு எதிர்ப்புக் கிளம்பியது. கம்யூனிசியம் பற்றிய அறிவு இருந்தால் மக்கள் இயற்கையின் எதிர்ப்பைக்கூட எதிர்த்து நின்று ஜெயிக்கமுடியும் என அவர் அப்போது நம்பினார். அதனால் மக்கள் அனைவரும் கம்யூனிச தத்துவங்களைப் படிக்கவேண்டும் என சட்டம்போட்டார். கம்யூனிசத்தைப் பரப்ப ஊர் ஊராக கலைக்குழுக்களை அனுப்பினார். அப்போது எதிர்ப்பாளர்கள் கம்யூனிசம் முக்கியமா? சாப்பாடு முக்கியமா எனக் கேள்வி எழுப்பினார்கள். இந்தமுறை எதிர்ப்பாளர்களின் பலம் கூடியது. கட்சியிலும் ஆட்சியிலும் அவர்கள் முக்கிய பதவிகளைக் கைப்பற்றினார்கள். எதிர்ப்பாளர்களை சமாளிக்கமாசேதுங் ஒரு புது ஆயுதத்தை எடுத்தார். அதன் பெயர் "கலாசாரப் புரட்சி !"

இதுவரை தன்னை எதிர்த்து மூச்சுக்கூட விடத் தயங்கிய கட்சியினர் தனக்கெதிராகக் கோசம் எழுப்பியதைப் பார்த்து மாசேதுங் இராணுவத்தினரைவைத்து எதிர்ப்பாளர்களை அடக்கத் திட்டமிட்டார்.

ஆனால் இராணுவமோ இந்த அதிகாரச் சண்டையில் எங்களை இழுக்காதீர்கள் என்று சொல்லிவிட்டு ஒதுங்கிநின்றது. மனம் தளர்ந்துபோவாரா மாவோ என்கிற மாசேதுங்? எதிர்ப்பாளர்களுக்கெதிராகப் போராட அவர் மாணவர்களுக்கு அழைப்புவிடுத்தார். மாவோவின் மந்திர சக்தி மாணவர்களிடம் அருமையாக வேலை செய்தது. நாட்டின் அத்தனை பள்ளிக்கூடங்களும் மூடப்பட்டன. பதிலுக்கு மாவோவின் எதிர்ப்பாளர்களும் எதிர்ப்பு மாணவர்படையை உருவாக்கினார்கள்.

அந்தப் படைகளும் துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகளோடு சீனாவின் வீதிகளில் நேருக்குநேர் மோதிக்கொண்டன. இதில் மாவோவின்மாணவர்படை எதிர்ப்பாளர்களின் படையை நசுக்கியது. ஆனால் மாவோ கிளப்பிய பூதத்தை ஒரு கட்டத்தில் அவராலேயே கட்டுப்படுத்தமுடியவில்லை. நகர்ப்புறங்களில் வசிக்கும் படித்தவர்களும் பதவிகளில் இருப்பவர்களும் தான் நாட்டைப் பிடித்திருக்கும் அத்தனை கேடுகளுக்கும் காரணம் என்று சொல்லி மாவோவின் மாணவர்படை அவர்களைத் தாக்கியது.தனது எதிர்ப்பாளர்களைத் தாக்க மாவோ ஆரம்பித்துவைத்த இந்த கலாசாரப் புரட்சி சுமார் 10 வருடகாலம் சீனாவை உலுக்கி எடுத்தது. இந்தக் காலகட்டத்தில் சீனாவின் பொருளாதாரம் சீரழிந்தது. தங்களின் எதிர்ப்பைக் காட்டும் அடையாளமாக எதிரிகளின் மாமிசத்தை தின்னும் அளவிற்கு மாவோவின் மாணவர்படையில் கலாசாரப் புரட்சி தலைவிரித்தாடியது.

கடைசியில் நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டு மாணவர்படையைக் கட்டுப்படுத்த வேண்டிய அளவிற்கு நிலமை சீர்குலைந்தது. அது அத்தனையும் நடந்துமுடிந்த பிறகும்கூட சீனமக்கள் யாரும் மாவோவை குறைசொல்லவில்லை. 1976ம்ஆண்டு அவர் இறந்தபிறகும்கூட அவர் செய்ததில் குறையேதும் இல்லை என்று சீன கொம்யூனிஸ்ட்கட்சி சான்றிதழ் கொடுத்ததோடு நிற்காமல் அவரது கலாசாரப் புரட்சிக்கு முழு அங்கீகாரம் வழங்கவும் செய்தது.

இறந்த பிறகும்கூட தனது புகழை இரும்புமாதிரி உறுதியாக வைத்திருக்க மாவோவால் எப்படிமுடிந்தது.? தாங்கள் கடவுளாக வணங்கிய புத்தரின் சிலைகளை உடைத்தவருக்கு சீன மக்கள் எப்படி இப்போது கோயில் கட்டிப்போற்றுகிறார்கள்?

காரணம் உலகத்தின் கண்களில் பலவீனமாக இருந்த சீனாவை பலப்படுத்தியவர் மாவோ. ஒரு பக்கம் ரஷ்யாவாலும் இன்னொருபக்கம் ஜப்பானாலும் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டும், அவமதிக்கப்பட்டும் இருந்த சீனாவிற்கு வெற்றிஎன்றால் என்ன என்று அறிமுகப்படுத்தியவரே மாவோதான்.

1950ம் ஆண்டு வடகொரியாவும் தென்கொரியாவும் போரில்



குதித்தபோது தென்கொரியாவுக்கு அமெரிக்கா வக்காலத்து வாங்கியது.ரஷ்யாவும் சீனாவும் வடகொரியாவின் பக்கம் இருந்தன. இந்தப்போரில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தின் படைகளை மாவோவின் சீன ராணுவம் ஓட ஓட விரட்டி வெற்றிபெற்றது.

இதே 1950ம் ஆண்டு சுதந்திர நாடாக இருந்த தீபெத் நாட்டின் மீது சீனா படையெடுத்தது. அதைத் தன் நாட்டின் ஒருபகுதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. ரஷ்யாவுடன் எல்லைத் தகராறுவந்தவுடன் மாவோவின் சீனா சுயமாக அணுகுண்டு தயாரித்து வந்த ரஷ்யாவையே பணிய வைத்தது. இந்தியாவின் ஒருபகுதியை ஆக்கிரமித்தபோதும் சரி வியட்நாமோடு மோதியபோதும் சரி மாவோவின் சீனா தன்னை அசைக்கமுடியாத ஒரு வல்லரசு என்று உலகுக்குப் பிரகடனப்படுத்திக் கொண்டது.

மாவோ தனது நாட்டிற்குத் தேடித்தந்த இந்த வெற்றிகள் ஒவ்வொரு சீனக் குடிமகனையும் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளச் செய்தன. மாவோ வழக்கமாக அணியும் பெரிய கொலர்வைத்த கோட் மாதிரிடிரஷ் சீனாவில் மட்டுமல்ல ஐரோப்பிய நாடுகளிலும் பிரபல்யமாகியது.

மாவோவிற்குப் பிறகு சீனாவில் ஆட்சிக்கு வந்த டெங்கியோ பிங் மாவோவின் கலாசாரப் புரட்சியால் பாதிக்கப்பட்டவர். மாவோவால் ஒதுக்கித் தள்ளப்பட்டவர். சீனாவின் பொருளாதாரத்தைச் சீரமைத்து அதைவளம் மிக்க நாடாக மாற்றியவர் அவர். ஆனால் அவரேகூட 1997ல் அதாவது தான் இறக்கும் கடைசி நிமிடம்வரை மாவோவை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

காரணம் சீனமக்களைப் பொறுத்தவரை மாவோ என்பவர் அவர்களுக்கு மெசையா அதாவது இறைதூதர் மாதிரி.

(வாவ் 2000)

# பிரிவினைக்குப் பிரியாவிடை

எங்கள்
சுதந்திர தேசத்துடன்
சோகங்கள்தான்–இன்று
சொந்தம் கொண்டாடுகின்றன

மானுடங்களின்
விழிவானம் பொழிந்த கண்ணீர் – இன்று
குட்டி மகாவலியாகி...

அந்த வேட்டுக்கள்
எங்களுக்கு
சாட்டுச் சொல்ல
அவகாசம் தரவில்லை...

இன்றேல், இறப்பதற்குமுன்
தேசிய கீதத்தைப்
பாடிவிட்டு
இருந்திருக்கலாம்

எங்களை ஏளனம்
செய்தவர்கள்
புரிந்து கொள்ளட்டும்
புரட்சிகளுக்கு நாங்கள்
புத்தாடை அணிவித்தோம்
என்பதை...



பிரிவினைகளுக்குப்
பிரியாவிடை கொடுக்க
வேண்டியவர்கள் – இன்று
வேற்றுமைகளுக்கு
“ வெல்கம்” போடுகின்றார்கள்

நீதி தேவதையை
நித்திரையாக்கிவிட்டு – இங்கு
நிம்மதிகளுக்கு வேதனை
ஆடைகளை அணிவிப்பது
அநியாயம்... அநியாயம்..

ஹேய்.....
தோழர்களே
பிரிவினைகளுக்கு
பிரியாவிடை கொடுக்க
நீங்கள்தான்
பொருத்தமானவர்கள் ..!

விரையுங்கள் முதலில்
வேற்றுமைகளுக்கு
வே..ட்..டு.. வைக்க ..!

எம். ரி எம். யுனூஸ்
காத்தான்குடி.

# ஒரு கூத்து அரங்கேறுகின்றது

உச்சி பிரித்து இழுத்தாற்போல அந்தக் கிராமத்தை இரண்டாக ஊடறுத்துச் செல்லும் கரடுமுரடான ஒரே ஒரு தார் றோட்டில் எருதுகளின் கழுத்துமணி ஓசையோடு போட்டிபோட்டபடி உருண்டு ஓடும் வண்டில் சில்லுகளின் கடகடா சத்தம் ஊரில் ஒரு பெரும் கலகலப்பையே உண்டாக்கிவிடுகின்றது.

கூத்துப் பார்ப்பதற்கென அயல்கிராமங்களிலிருந்து கூடு கட்டிய வண்டில்களில் பன்பாய்கள் தலையணைகள் சகிதம் வந்து இறங்கிய மக்கள், களரியை வளைத்து மொய்த்துக் கொள்கிறார்கள்.

ஓரளவு உயர்ந்து வளர்ந்த வாகைமரங்களும் வேப்பமரங்களும் கூடிநின்று நிழல் பந்தல்போடும் வில்லு ஊரியன்கட்டு என்ற அந்தக் கிராமத்தில் இரண்டுஅடி உயரத்தில் வட்டமாக மண்மேடை அமைத்து அதன் மேல் 'புல்லாங்கத்தை' போட்டு அமர்த்தி புழுதி எழாது தண்ணீர் தெளித்து அது சரிந்துவிடாமல் இழைத்த ஓலையால் வளைத்துக் கட்டி மேலே பலவண்ணச் சேலைகளால் ஒருகுடைபோல் அமைக்கப்பட்ட கூத்துக்களரி இரண்டுமூன்று பெற்றோல்மெக்ஸ் வெளிச்சத்தில் மிகுந்த பிரயாசப்பட்டு தன்னைக் காட்டிக் கொள்கிறது.

அது பதினெட்டாம்போர். பாண்டவருக்கும் கௌரவருக்கும் இடையே பலப்பரீட்சையில் இந்தப்போர்தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கப்போகின்றது. அதுவும் சமபலம்கொண்ட வீமனும் துரியோதனனும் மோதப்போகிறார்கள். தண்டாயுதமும், தண்டாயுதமும் அடித்துக்கொள்ளப்போகின்றன. இதனால் மக்களின் ஆர்வம் அதிகமாகின்றது.

மக்களின் ஆர்வத்தைப் புரிந்துகொண்ட அண்ணாவியார்



தம்பியப்பா களரியை இரண்டுகையாலும் தொட்டுக் கும்பிட்டுக் கொண்டு உள்ளே காலடி எடுத்து வைக்கின்றார். அவரைத் தொடர்ந்து மத்தளக்காரன் வேலன் பிற்பாட்டுக் காரர்கள் ஐந்தாறுபேர் களரியின் மத்தியில் கூடுகின்றனர். இதனால் கூத்து ஆரம்பமாகப்போகின்றது என்று எண்ணிய மக்களின் ஆர்வம் இன்னும் அதிகமாகின்றது. எட்டுமுழுவேட்டி உடுத்தி வெள்ளைநிற முழுக்கைசட்டை அணிந்து இரண்டு பக்கமும் தங்க நிறக்கரைபோட்ட சால்வையை இடுப்பில் இறுக்கி கட்டி, நெற்றிமுழுவதும் திருநீறாகக் காட்சிதரும் அண்ணாவியார் தம்பியப்பா, பள்ளிக்கூடவாசனையே இல்லாதவர். கேள்விச் செல்வமே இவரின் ஒரே ஒரு செல்வம். ஒருபாட்டை ஒருதரம் பாடிக்காட்டினால்போதும். அது அவர் மனதில் அப்படியே ஒட்டிக் கொள்ளும்.

கையில் சல்லரி ஏந்தி புளகிதமாக நின்றுகொண்டிருக்கும் அண்ணாவியார் மக்களின் ஆர்வத்துக்கு இனியும் அணைபோடக்கூடாது என்று நினைத்தவராய் தாளம் தீர்ந்து " ஆனைமுகனே..." என்ற காப்புவிருத்தத்தை பாடி பதினெட்டாம்போரை ஆரம்பித்து வைக்கின்றார். அண்ணாவியாரின் வெண்கலக் குரலுக்கும் சல்லாரி ஓசைக்கும் ஈடுகொடுக்கும் வண்ணம் வேலனின் விரல்கள் மத்தளத்தில் அற்புதமாக விளையாடுகின்றன. இந்த நாதவெள்ளத்தில் ஊரியன்கட்டே மூழ்கிப்போகின்றது.

## வாகரைவாணன்

கூத்து ஆரம்பிக்கப்பட்டதைக் கண்ட பொன்னன் பட்டங்கட்டியாருக்கு ஒரே குதூகலம். இடுப்பில் சங்குமார்க் தமிழ்நாட்டுச் சாறனும் தோளில் ஒரு சால்வையுமாக சற்றுமுன்னே தள்ளிய வயிற்றோடு தோற்றம் தரும் பட்டங்கட்டியார் வழக்கம்போல நன்றாக 'தண்ணி' போட்டுக் கொண்டு களரிக்குள் ஏறி அண்ணாவியாரையும் மற்றவர்களையும் உசார்ப்படுத்துகின்றார்.

பட்டங்கட்டியார்தான் அந்த ஊரின் பட்டங்கட்டாத ராசா. வாகரை சூசைமுத்து விதானையாரின் கீழ் பணிபுரிந்த மூன்று பட்டங்கட்டிமாரில் ஒருவரான பொன்னன் ஒரு பெரிய பசுமாட்டுப் பட்டியின் சொந்தக்காரர். அதனைவிட அவணக்கணக்கில் நெல்விளையும் விளைநிலங்களின் போடியார் அவர். இந்தச் செல்வங்களும் அரச அதிகாரமும், அவர்

சொல்லை ஊரின் வேதவாக்காகவே ஆக்கிவிட்டன.

காப்புவிருத்தத்தைத் தொடர்ந்து கட்டியக்காரன் வரவு ஆரம்பமாகின்றது. இதனை எதிர்பார்த்திருந்த சலவைத் தொழிலாளர்கள் முத்தனும் காளியும் ஓடிவந்து வெள்ளை பிடிக்கின்றனர். அண்ணாவியார் தாளம் தீர்த்து உசாரான உரத்த குரலில் விருத்தம்பாடுகின்றார். கட்டியக்காரனும் தன்னைப்பற்றியும் தனது வரவுக்கான காரணத்தையும் இரண்டொரு விருத்தங்களில் எடுத்துக் கூறுகின்றான்.

கட்டியக்காரன் ஒரு சின்னப் பையன். கடுகு சிறிது காரம் பெரிது என்னும் உண்மை அவனைப் பொறுத்தமட்டில் நூற்றுக்கு நூறுவீதம் சரிதான். பாட்டில் மட்டுமன்றி, அண்ணாவியாரின் 'தகதிகதா' என்ற தாளத்திற்கு அவன் எட்டுப்போட்டு ஆடிய ஆட்டத்தின் மூலமும் தன்னை ஒரு தேர்ந்த கலைஞனாகவே காட்டிவிடுகின்றான்.

அடுத்து பாண்டவர் வரவு. பத்தினி பாஞ்சாலி சகிதம் ஐவரும் வருகை தருவதைக் கண்ட மக்களிடையே பெரும் ஆரவாரம் ஏற்படுகின்றது. சீனவெடிச் சத்தமும் வானவேடிக்கைகளும் ஊரையே அமளிதுமளியாக்குகின்றன.

தலையில் பென்னம்பெரிய கிரீடங்களோடு இடுப்பில் ஒடுங்கி கீழ்ப்பாகம் அகன்று வட்டமாகக் காப்புப்போலத் தொங்குகின்ற வட்டுடைகளை அணிந்து காட்சிதரும் பாண்டு புத்திரர்களைக் கண்டவுடன் அண்ணாவியார் தம்பியப்பா தனது கைவரிசையை மட்டுமன்றி, வாய்வரிசையையும் காட்டுகின்றார்.

தாளம் தீர்த்து ஒரு எடுப்பு எடுத்து விருத்தம்பாடிய அண்ணாவியார் "தத்திமித்திமித்தக சனுதசனுதசனு" என்ற தாளக் கட்டிற்கேற்ப ஐவரையும் எட்டுப்போட்டு அற்புதமாக ஆடவைக்கின்றார்.

இறுதியாக மக்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்த பதினெட்டாம் போர் ஆரம்பமாகின்றது. இரவு முழுவதும் கண்விழித்துக் கூத்துப் பார்க்கும் மக்களுக்குச் சூடேற்ற அந்த வெட்டவெளியில் ஆங்காங்கு போடப்பட்டிருந்த தேநீர்க் கடை உரிமையாளர்கள்கூட தங்கள் வியாபாரத்தைக் கொஞ்சநேரம் நிறத்திவிட்டு வீமன் துரியோதனன் போரைப் பார்க்க ஆயத்தமாகின்றனர்.

இதிகாச புருசர்களான வீமனும், துரியோதனனும் இப்படித்தான் இருப்பார்களோ என்று குழந்தைகளை எண்ணவைக்கும் விதத்தில்



தாருப்பாய்ச்சி கட்டி மீசையை முறுக்கிவிட்டு, கையில் தண்டாயுதங்களோடு நின்ற வீமனும் துரியோதனனும் ஒருவரை ஒருவர் அடித்து நொறுக்கிவிடுவதுபோல் கறுவிக் கொள்கிறார்கள்.

இந்த இரு வீரர்களினதும் ஆட்டிற்கும் பாட்டிற்கும் ஈடுகொடுத்துக் கொண்டிருக்கும் அண்ணாவியாரின் சல்லாரியும், வேலனின் மத்தாளமும், தாய்மாரின் மடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளைத் துடிக்கப்பதைக்க எழுப்பிவிடுகின்றன.

சம பலம் கொண்ட இரு வீரர்களது யுத்தத்தைக் காண்பதற்காக துவாரகைக் கிருஷ்ணனின் தமையன் பலராமன் அங்குவந்துவிடுகின்றான். பாரதப்போர் ஆரம்பமாகியபோது எந்தப் பக்கமும் இணைந்து போர் தொடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டு தீர்த்தயாத்திரைபோயிருந்த பலராமனும் கிருஷ்ணர், தருமர், அருச்சுனன், என்று ஒரு பெரிய வீரர்களின் கூட்டம், வீமன், துரியோதனன் யுத்தத்தைப் பார்த்து விழிப்புருவங்களை உயர்த்துகிறது.

துரியோதனனை துவம்சம் செய்துவிடுவதுபோல் உக்கிரப்போர் செய்த வீமன், துரோபதை துகில் உரியப்பட்டபோது தான் செய்த சபதத்தினை நினைவுகூர்ந்தவனாய் துரியோதனின் தொடையில் தனது தண்டாயுதத்தால் தாக்கி அவனை விழ்த்திவிடுகின்றான்.

போர் நெறிக்குமாறான வீமனின் இந்தச் செயல் கண்டு வெகுண்டபலராமன் தனது கலப்பை ஆயுதத்தை எடுத்துக் கொண்டு அவனைத் தாக்கப்போகின்றார். கண்ணன் அவரைத் தடுத்து அமைதிப்படுத்துகின்றான்.

பொழுது பல பலத்துவிடிகின்றது. விடிய விடிய கண்விழித்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் தனது கூத்தை அரங்கேற்றி நிறைவுசெய்த அண்ணாவியார் தம்பியப்பா ஒரு பெரிய பூரிப்போடு," ஆலிலை மெலிலை அமர்ந்தாய்... என்ற பாட்டுப்பாடி அனைவருக்கும் பிரியாவிடை தருகின்றார்.

மக்கள் பாய் சுற்றுகின்றனர்....

## ஆரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டதே தமிழர் சாதி அமைப்பு

இந்திய நாட்டின் ஜன சமுதாயம் என்பது, குடுகுடுப்பைக் காரனின் ஒட்டுப் போட்ட சட்டை மாதிரியான சுமார் 450 பழங்குடி இனக் குழுக்களும் வெளிநாட்டு வந்தேறிகளும் இணைந்து கலந்து உருவான ஒரு கதம்பக் கூட்டணி. இந்நாட்டில் கிட்டத்தட்ட 750 வட்டார மொழி வழக்குகள் பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. இவற்றைத் தெற்காசிய மொழிக் குடும்பம், திபேத் பர்மிய மொழிக் குடும்பம் என மூன்றாக மொழியியலாளர்கள் பிரிக்கின்றார்கள். இந்திய மக்கள் தொகையில் சுமார் எட்டு சதவீத அளவில் பழங்குடியினர் உள்ளனர். அவர்கள்தான் இந்தியாவின் மூத்த குடிமக்கள்.

பழங்குடியல்லாத வந்தேறிகள் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை அல்லது திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். இந்தியாவின் இன்றைய சமூகத்தையும், நாகரிகத்தையும் இவர்கள்தான் உருவாக்கினார்கள். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்தியாவுக்குள் பல இனத்து மக்கள் புகுந்து கலந்து பகிர்ந்து கொடுத்து, வாங்கி உருவாக்கியதுதான் இன்றுள்ள இந்திய சமுதாயம். சுமார் 4000 ஆண்டுகளுக்குமுன் மேற்காசியாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும் கைபர் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்தவர்கள் சாதிக் கட்டமைப்பை அறிமுகப் படுத்தினார்கள். இந்தச் சாதி சார்ந்த சமூகக் கட்டமைப்பு வேறெந்த நாட்டிலும் உருவாகவில்லை. வெவ்வேறு நாடோடிக் குழுக்கள் தமது தனித்தன்மைகளைப் பாதுகாப்பதற்காக அத்தகைய தொழில் சார்ந்த வகைப்பாட்டை அனுசரித்து வந்தது. அதையே இந்தியாவுக்குள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கத் தொடங்கியிருக்கலாம். இந்தப் பழக்கம் காலப்போக்கில் திசைமாறி, உருமாறி, சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு வழிகோலியிருக்கிறது. இத்தகைய பழைய மனித வரலாறுகளை ஆய்வு செய்கிற துறை தொல்மானிடவியல் எனப்படும். இது சமூகங்களின் தோற்றுவாய்கள். உடல் சார்ந்த மற்றும் கலாசாரம் சார்ந்த வளர்ச்சிகள், பரம்பரை மற்றும் இனச் சிறப்பியல்புகள், பழக்க வழக்கங்கள், விபரிக்கும்



நம்பிக்கைகள் ஆகியவற்றை ஆராய்வது. தொல்பொருளியல் துறை அதற்கு உதவியாக புதை படிமங்கள், மனிதரால் உருவாக்கப்பட்ட பொருட்கள், கட்டடங்கள், ஆகியவற்றின் வடிவமைப்பையும், வயதையும், காலத்தையும், கடுமையான அறிவியல் உத்திகள் மூலம் ஆராய்கிறது. இயற்பியல், இரசாயனவியல், புவியியல், பாறையியல் போன்ற துறைகளும் அத்தகைய பகுப்பாய்வுகளில் துணை போகின்றன. நவீன உயிரியல் உத்திகள் பூமி, அதிலுள்ள உயிரினங்கள் ஆகியவற்றின் கடந்தகால வரலாற்றை ஊகித்தறிவதில் பெரும் திறனுள்ள உத்திகளை உருவாக்கியுள்ளது.

மரபியல் கூறுகளான டி.என்.ஏ. பரிசோதனை அவற்றில் ஒன்று. கடந்த 50 ஆண்டுகளில் மரபணு ஆய்வுத்துறை பெருமளவில் முன்னேறியுள்ளது. பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன், வாழ்ந்து, மடிந்து, மண்ணுக்குள் புதைந்து, புதை படிமங்களாய் மாறிய உயிரினங்களின் டி.என்.ஏக்களைப் பிரித்தெடுத்து நுண்ணுயிர்கள், தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள், ஆகியோரின் குடும்ப வரிசைத் தொடர்களை உருவாக்கி முடித்திருக்கிறது. அதன் நிமித்தமாக தொல்மானுட மூலக்கூறியல் என்ற புதிய துறையே உருவாகிவிட்டது. உயிரியல் ஆய்வாளர்கள் வரலாற்றாசிரியர்களாக பரிணமித்திருக்கிறார்கள்.

**(கே. என். இராமச்சந்திரன்)**

பார்த்தா மஜூம்தார் என்ற பேராசிரியரின் தலைமையிலான ஆய்வர் குழு இந்திய மக்களின் இனப் பிரிவுகளைக் கண்டறிந்து ஒவ்வோர்இனக் குழுவும் எப்படி, எப்போது, எங்கிருந்து இங்குவந்து குடியேறியது? என்பதைக் கண்டுபிடித்தார்கள். அவர்கள் வெவ்வேறு சமூக அமைப்பைச் சேர்ந்த, வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கிற வெவ்வேறு மொழிகளைப் பேசுகிற வெவ்வேறு சாதிகளையும், மதங்களையும் பழங்குடியினர்களையும் சேர்ந்த 1200 ஆண்-பெண்களிடமிருந்து இரத்தங்களைச் சேகரித்து டி.என்.ஏ. பகுப்பாய்வு செய்தனர்.

மைட்டோ காண்ட்ரிய டி. என். ஏக் கள் தாய்வழிப் பரம்பரையைப் பற்றியும், ஒய் குரோமோசோமிலிருக்கிற டி.என்.ஏக்கள் தந்தை வழிப் பரம்பரை பற்றியும் தகவல்களை அளித்தன. ஏனைய 22 குரோமோசோம் களின் டி.என.ஏ.க்கள் இருவழிக் கூட்டுப் பாரம்பரியப் பண்புகளை

எல்லா இந்தியப் பெண்களுக்கும் சில நூறு பெண்கள்தான் ஆதித் தாய்மார்கள் என்று அவர்களுடைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அந்தப் பெண்கள் இங்கேயிருந்த் ஆதிப் பழங்குடியினராகவோ, வெளியிலிருந்து வந்தவர்களாகவோ அல்லது அதிலே பாதி இதிலே மீதி என்றோ இருக்கலாம். ஒரு சிறிய பெண் கூட்டம் சமூகத்தில் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தி வந்ததாகச் சில வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். கிட்டத்தட்ட எறும்பு அல்லது தேனீக்களின் வாழ்வு முறையை அது ஒத்திருக்கலாம்.

பழங்குடி இனத்தவர்க்கும், சாதியமைப்புள்ள இனத்தவருக்கும் பெரும் மரபியல் தன்மை வேறுபாடுகள் தென்படுகின்றன. பழங்குடியினர் சாதியினத்தவரைவிட பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் வசிக்கத் தொடங்கியவர்கள். சாதியமைப்பு உருவான காலகட்டத்தில் மத்திய ஆசியாவிலிருந்தும் மேற்காசியாவிலிருந்தும் ஏராளமானவர்கள் இந்தியாவிற்குள் புகுந்து உள்ளூர்வாசிகளுடன் கலந்துவிட்டனர். இந்தோ, ஐரோப்பிய மொழிகளைப் பேசியவர்களின் பெண்களும் பல வம்சங்களைத் தொடக்கிவைத்திருக்கின்றார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் தெற்காசிய மொழிக் குடும்பத்தினர் வட கிழக்கு எல்லைப் பிரதேசங்கள் மூலமாக உள்ளே வந்திருக்கிறார்கள். திபெத்- பர்மிய மொழிக் குடும்பத்தினர் மஞ்சள் நதி தீரத்திலிருந்து இமயமலையைக் கடந்து உள்ளே புகுந்திருக்கிறார்கள். தெற்காசிய மொழிக் குடும்பத்தினர் சிலரும் அதே வழியாக வந்திருக்கலாம். காசி- யந்தியா மலைப் பகுதிகளில் இன்றும் அவர்களின் வம்சாவழியினரை காணமுடிகின்றது. இந்த இரு குழுவும் தென் சீனாவில் வெவ்வேறு காலகட்டங்களில் வசித்திருக்கலாம்.

இந்தோ ஐரோப்பிய மொழியினர் இந்தியாவுக்குள் நுழைந்த போது துணைக்கண்டம் முழுவதும் திராவிட மொழிக் குடும்பத்தினர் பரவியிருந்தனர். சுமார் 3500 ஆண்டுகளுக்கு முன் உள்ளே வந்த இந்திய ஐரொப்பிய மொழிக் குடும்பத்தினர் தான் சாதிப் பிரிவுகளை அறிமுகப் படுத்தினர். திராவிட மொழிக் குடும்பத்தினர் அதை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொண்டனர். இந்தோ ஐரோப்பிய மொழிக்



குழுவினர் கங்கைச் சமவெளிக்குள் முன்னேறியபோது அவர்களின் மேலாதிக்கத்துக்கு உட்படவிரும்பாத திராவிட மொழிக் குழுக்கள் பல தென்னிந்தியாவுக்கு இடம் பெயர்ந்தனர். அவர்கள் தென்னிந்தியப் பழங்குடியினருடன் கலந்து ஒன்றினர்.

இந்த மேல் சாதியினரின் டி.என்.ஏக்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்களால் விநியோகிக்கப்பட்டவை என்று தெரிகிறது. தென்னிந்தியாவை விட வட இந்தியாவில் இந்த அம்சம் தூக்கலாக இருக்கின்றது. முதலிரண்டு மேல் சாதியைச் சேர்ந்தவர்களின் மரபியல் கூறுகள் மத்திய ஆசிய மக்களின் மரபியல் கூறுகளுடன் அதிக நெருக்கமான உறவுள்ளவையாகத் தெரிகின்றன. தென்னிந்திய மேல் சாதியினரின் டி.என்.ஏக்களில் அத்தகைய உறவு தென்படவில்லை. திராவிட மொழிக்குடும்பத்தினர் தெற்கே இடம் பெயர்ந்தும் வட இந்தியாவிலிருந்தும் மத்திய மற்றும் மேற்கு ஆசியப் பரம்பரையினர் தென்னிந்தியாவிலும் பரவினர். அவர்கள் பலவிதமான கலப்பினங்களை உருவாக்கினர். ஒவ்வொரு மனிதரிலும் பல்வேறு இனத்தவரின் மரபியல்கூறுகள் தென்படுகின்றன. எனவே தற்போதுள்ளவர்களின் டி.என்.ஏக்களை வைத்து ஒவ்வொருவரும் எந்த இனத்தின் வழித்தோன்றல்கள் என்பதைக் கண்டுபிடிக்கமுடியாது.

தினமணி.

## அண்மைக் காலங்களில் சுனாமி

| | | |
|---|---|---|
| நிக்கரக்கூவா | - | செப்ரெம்பர் 2, 1992 |
| புளோரஸ் தீவு | - | டிசம்பர் 12, 1992 |
| ஜப்பான் | - | யூலை 12, 1993 |
| கிழக்கு ஜாவா | - | யூன் 2, 1994 |
| ஜலிஸ்கோ மெக்ஸிகோ | - | ஒக்ரோபர் 9, 1995 |
| சுவாவெஸ்ஸி தீவு | - | ஜனவரி 1, 1996 |
| இரியன் ஜயா | - | பெப்ரவரி 17, 1996 |
| பெரு (தெற்குகரை) | - | பெப்ரவரி 21, 1996 |
| மின்டோரா தீவு | - | நவம்பர் 14, 1996 |

## சுனாமி தந்த சோகம்

சின்னஞ்சிறு சிசுவாய் என் சொந்தச் சகோதரிக்காய்
உன்னைக் கொடுத்ததினால் தத்துப் பிள்ளை ஆகினையோ?
பிறந்தது ஓரிடமாய் வளர்ந்தது வேறிடமாய்
பாரில் வளர்ந்ததற்கு விதி வகுத்த வழியிதுவோ?
குமார் உன்னைச் சீராட்ட நாம் தவம் செய்தோமில்லை
குன்றாத பாசம் காட்டி மேரியும் யோசேப்பும் பெற்றோர் ஆகினரே
கோயில் திருத் தொண்டில் குடும்பமாய் கலந்தாயே!
காலமெல்லாம் வளர்த்தவர் கோணாமல் வாழ்ந்த உந்தன்
குணம் கண்டு நலம் கண்டு குருமாரே பெண் தந்தார்
குணவதியாம் சகாயமலர் குழந்தைகள் மதுஷா செறோன்
உன்குடும்பம் ஒற்றுமையாய் ஊர் போற்ற வாழ்ந்திட
பெருவாழ்வு கண்டதனைப் பெருமையோடு நினைத்திருந்தோம்
புனித யேசு பிறந்தநாள் புதுப் பொலிவு நிறைவு பெற
புதுநாளாம் இருபத்தாறு புகுந்ததையோ யமன் வடிவில்
எல்லாம் ஒருநாளில் சில துளியில் தீர்ந்ததுவே
இல்லம் உடைமை மேலாம் உயிர்களும் பறிபோயின
குமுறும் எம் நெஞ்சின் அலை கொன்ற அலையில் பெரிதே!
குடும்பமாய் பறிகொடுத்தோம் உறவினர் நாம் ஏது செய்தோம்?
வளர்த்த பெற்றார், மனைவி, பாலர், பேரன் சுரேனும் அன்றோ?
வந்த பேரலையில் ஒன்றாய் வேறுலகில் சென்றுவிட்டீர்
பாசக் கயிறுகள் பலவும் அறுந்ததடா பாழும் காலன் நெஞ்சம்
கல்லோ சொல்வார் யார்?
தேசம் முழுதுமாகப் பிணக் கோலம் சூழ்ந்திருக்க
திருமகனே உன்நினைவு துடித்திட வைக்குதடா
தேடிக் கிடைத்த உந்தன் பூதவுடல் பார்த்ததனால்
தீரவில்லை தீரவில்லை எம் துயரம் தீரவில்லை
மகனே குமார் நீ மீண்டும் வருவேன் என்றாய்
மாளாத துயர்தானே வந்ததடா இடிபோல
புனித இயேசுபிரான் திருப்பாதம் சரணமல்லால்
புவிமீது நமக்கினித்தான் யார் கதியோ..? யார் சொல்வார்..?

உன் துயரால் கரைந்திடும்
அன்புப் பெற்றோர்.



## சுனாமிப் பணம்

சும்மா வந்து குவிகிறது
சுனாமிப் பணம்
அம்மா என்ன செய்வாரோ
அனாலுக்கே சந்தேகம்?
அதனால்
அவசர நடவடிக்கையாம்!

நீதி கிடைக்குமா
நிவாரணத்தில்?
இல்லை...
பாதிதானா?
பாதிக்கப்பட்டவர்கள்
கேட்கிறார்கள்?
பதில் சொல்வது யார்?
அதிகாரிகளே
அரசியல் வாதிகளே
நீங்கள்தான்!
நினைவில் வையுங்கள்
ஏழை அழுத கண்ணீர்
வாளாக
உங்கள் வாழ்வை அறுக்கும் !

காண்டபன்

## 'கூடாரர' வீடுகள்

கூடாரம்தான்
எங்கள் நிரந்தர
வீடாகுமோ?

கல்வீடு என்பது
கனவுதானா?

கோடிக்கணக்கில்
வந்து குவியும் பணம்
எங்கேயாவது
ஓடிப் போகுமோ?

இருந்ததெல்லாம்
இழந்துவிட்டோம்
அருந்தும் நீர் கூட
அந்நியம் தான்!

இந்த
இன வாதத்தை
சுனாமியாலும்
இழுத்துச் செல்ல
முடியவில்லையே
என்ன செய்ய?

வியாசர்